பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 08 புதன்கிழமை 21.04.2021 கதிர் 35

## எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம்; சபை நடவடிக்கை ஒத்திவைப்பு

அரசியல் பழிவாங்கல் விசாரணை ஆணைக்குழு அறிக்கை மீதான விவாதம் தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினருக்கிடையே ஏற்பட்ட சர்ச்சை நிலைமையை தொடந்து நாடாளுமன்றம் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இன்று முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்றம் சபாநாயகர்

☞ 2

### ஈஸ்டர் தாக்குதலுக்கு 2 வருடங்கள்

## கிறிஸ்தவ தேவாலயங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள்!



இலங்கையின் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத்திரக் ஹோட்டல்களை இலக்கு வைத்து, 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு இன்றுடன் இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்த, காயமடைந்த மற்றும் பாதிக்கப்பட்ட அனைவருக்குமான பிரதான திருப்பலி கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் இன்று இடம்பெற்றது.

கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் தலைமையில் கொச்சிக்கடை சென்ட் அந்தோனியார்

☞ 2



## அலரி மாளிகையில் தீபமேற்றி அஞ்சலி செலுத்திய மஹிந்த

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் இன்று தீபமேற்றி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

அத்துடன், தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலியையும் அவர் செலுத்தினார்.

### ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# நீதி கிடைக்கும் வரை நாம் போராடுவோம்!

### நினைவேந்தல் நிகழ்வில் பேராயர் இடித்துரைப்பு




**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மைகளை வெளிக்கொண்டுவந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் வரை எமது எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடரும்.**

**- இவ்வாறு கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.**

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நாளான இன்று நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**

☞ 2

## குற்றவாளிகள் சகலரையும் நீதியின் முன்னிறுத்துவோம்

### நாடாளுமன்றில் பிரதமர் மஹிந்த வாக்குறுதி



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் அதேவேளை, இது போன்ற துரதிர்ஷ்டவசமான சூழ்நிலை இனி எப்போதும் ஏற்படாது தடுக்க ஓர் அரசு என்ற ரீதியில் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அத்துடன்,

☞ 2

## கறுப்புச் சட்டை அணிந்து நாடாளுமன்றில் அஞ்சலி



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி நாடாளுமன்றத்தில் ஆளும், எதிரணி உறுப்பினர்கள் இன்று காலை இரண்டு நிமிடங்கள்

☞ 2

## மஹிந்த தெளிவுடன் செயற்பட வேண்டும்!

### 'போர்ட் சிட்டி' சட்டமூலம் குறித்து கரு 'ருவிட்'

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலத்தை முறைகேடான விதத்தில் பயன்படுத்தி தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சட்டமூலங்கள் நிறைவேற்றப்படக் கூடாது என்று சுட்டிக்காட்டியிருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, கொழும்புத் துறைமுகநகர

☞ 2

## இலங்கை வழியாக தூத்துக்குடிக்குக் கடத்தப்பட்ட 1000 கோடி ரூபா பெறுமதியான கொக்கைன் மீட்பு

(ந.லோகதயாளன்)

இலங்கைவழியாகதூத்துக்குடிக்கு மரக்குற்றிகளை ஏற்றி வந்த கப்பலில் உள்ள சரக்கு பெட்டகம் ஒன்றில் இருந்து 9 கறுப்பு நிற பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயிரம் கோடி பெறுமதியான கொக்கைன் போதைப்பொருளை நேற்று இந்திய மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

தூத்துக்குடி சிதம்பரனார் துறைமுகம் வழியே தினசரி பல்லாயிரம் கோடி ரூபா அளவுக்கு வர்த்தகம் நடைபெற்று வருகின்றது.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்திலிருந்து அண்டை நாடுகளான இலங்கை, மாலைதீவு, லட்சத்தீவு, சிங்கப்பூர், மலேசியா, சீனா, பனாமா, அமெரிக்கா உள்ளிட்ட இடங்களுக்கும் நேரடி வர்த்தக சரக்கு கப்பல் போக்குவரத்து நடைபெறுகின்றது.

இந்நிலையில், நேற்று தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்துக்கு வந்த சரக்கு கப்பல் ஒன்றில் கண்டெய்னர் மூலமாக கொக்கைன்

☞ 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றவாளிகள் சகலரையும் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கொடூரத் தாக்குதலுக்கு காரண மான அனைவரையும் நீதியின் முன் னிறுத்தநாம்நடவடிக்கைமேற்கொண்டு வருகின்றோம் என்றும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று இரண்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி நாடாளுமன்றத்தில் இன்று பேசும்போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈராண்டுகளுக்கு முன்னர் அதாவது 2019 ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தினத் தில் இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட இருண்ட தினத்தின் ஈராண்டு நிறைவை மிகுந்த அனுதாபத்துடன் இன்று நினைவு கூருகின்றோம்.

அன்று உயிர்த்த ஞாயிறு தின வழி பாட்டில் ஈடுபட்டிருந்த அப்பாவி மக்கள் உள்ளிட்ட 259 பேர் உயிரிழந்ததுடன் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்த னர்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த அனைத்து அன்புக்குரியவர் களையும் நினைவு கூருவதுடன், உயிரி ழந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் தாக்கு தலின்போது காயமடைந்த மற்றும் ஊன முற்ற நூற்றுக்கணக்கானோர் உடல், உள ரீதியாக பாதிப்படைந்துள்ள நிலை யில் அவர்களும் விரைவில் குணம டைய பிரார்த்திக்கின்றேன். இதே வேளை, தாக்குதலில் உயிரிழந்த, ஊன முற்ற மற்றும் காயமடைந்த அனைவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங் களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவால் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கமைய தயாரிக்கப்பட்ட அறிக்கை மற்றும் பிற ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு சட்ட நடவ டிக்கை மேற்கொள்ள சட்டமா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகளின் ஊடாக இவ்விடயத்தில் நாம் தலையீடு செய்யா விடினும், அச்செயற்பாட்டை வெற்றிகர மாக முன்னெடுத்து செல்வதற்கான அனைத்து ஒத்துழைப்பையும் நல்கு வதற்கு அரசு என்ற ரீதியில் தயாராக விருப்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அத்துடன் ஆணைக்குழுவுக்கு மேல திகமாக செயற்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஆகியவற்றின் விசா ரணைகளை சுயாதீனமான முறையில் முன்னெடுப்பதற்குத் தேவையான வசதி களை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத் துள்ளார்.

அந்த விசாரணைகளின் இறுதியில் அந்தந்த திணைக்களங்களின் ஊடாக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என நாம் நம்புகின்றோம்.

கடந்த அரசால் குற்றங்கள் அலட்சியம் செய்யப்பட்டமையாலும், தேசியப் பாது காப்பையும், தமது அரசியல் நடவடிக்கை களையும் குழப்பிக் கொண்டமையாலும் இறுதியில் பாதிக்கப்பட்டது அப்பாவி பொதுமக்களே ஆகும். இன்றும், தாக்கு தலுக்கு காரணமான தரப்புகள் பல்வேறு பொய்களை சமூகத்தில் பரப்பி, விசார ணைகளில் செல்வாக்கு செலுத்துவதன் மூலம் சமூக கவனத்தை திசை திருப்பும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். நாம் அவர்கள் குறித்து வருந்துகின்றோம் - என்றார்.

## இலங்கை வழியாக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதைப்பொருள் கடத்த உள்ளதாக மத் திய வருவாய் புலனாய்வுத் துறைக்கு தக வல் கிடைத்துள்ளது.

இதைத்தொடர்ந்து, புலனாய் வுத்துறை அதிகாரிகள், சுங்கத்துறை அதி காரிகள் இணைந்து சோதனையில் ஈடு பட்டனர்.

அப்போது பிரேஸிலிலிருந்து இலங்கை வழியாக தூத்துக்குடிக்கு 8 சரக்கு பெட் டகங்களில் மரக்குற்றிகளை ஏற்றி வந்த கப்பல் உள்ளே நிறுத்தப்பட்டிருந்தது.

மரக்குற்றிகள் கொண்டுவரப்பட்ட சரக்கு பெட்டகம் ஒன்றில் 9 கறுப்பு நிற பைகள் மறைத்துவைக்கப்பட்டிருந்தமை மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதி காரிகள் சோதனையில் கண்டுபிடிக் கப்பட்டது.

குறித்த 9 பைகளில் மொத்தம் 400 கிலோ எடையுள்ள கொக்கைன் போதைப்பொருள் இருப்பது சோதனை யில் தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து போதைப் பொருளை பறிமுதல் செய்த அதிகாரிகள், அதை அனுப்பியவர் மற்றும் அதை பெறுபவர் முகவரியை விசாரணை நடத் தினர். ஆனால், அவை போலியான முக வரி என கண்டு பிடிக்கப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட கொக்கைன் போதைப்பொருளின் மதிப்பு சர்வதேச அளவில் சுமார் ஆயிரம் ரூபா கோடிக்கும் மேல் இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

## கறுப்புச் சட்டை அணிந்து ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி செலுத்தினார்.

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கைக ளில் கறுப்புப் பட்டியை அணிந்தவாறும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர் கறுப்பு உடையிலும் நாடா ளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்ட னர்.

## மஹிந்த தெளிவுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் ஆராய்வதற்குப் போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். ஓர் அனுபவம் வாய்ந்த அர சியல்வாதி என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெளிவுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

- இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

அரசால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் கொழும்புத் துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் பல் வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்தி ருக்கின்றது.

இது குறித்து கரு ஜயசூரிய அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய் துள்ளார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப் பதாவது:-

சில சட்டமூலங்கள் தொடர்பில் வெகு விரைவில் நாடாளுமன்றத்தில் ஆராயப் படவுள்ளது. நாடாளுமன்றத்தில் மூன் றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை முறைகேடான விதத்தில் பயன்படுத்தி தேசிய ரீதியில் மிகவும் முக்கியமான சட்டமூலங்கள் மற்றும் யோசனைகள் நிறைவேற்றப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

கொழும்புத் துறைமுகநகர பொருளா தார வலய ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும், அதில் திருத்தங்களை மேற்கொள்வ தற்கும் போதியளவு கால அவகாசத்தை வழங்குவது முக்கியமானதாகும்.

அதேபோன்று மறுபுறம் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஆணைக் குழுவின் அறிக்கையை நாடாளுமன் றத்தில் சமர்ப்பிப்பதென்பது நீதித் துறையை குறைமதிப்பீடு செய்வதற்கு வழிவகுக்கும்.

இவற்றுக்கு மத்தியில் ஓர் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெளிவுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும் - என்று வலியுறுத்தியுள்ளார்.

## நீதி கிடைக்கும் வரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னணியில் உள்ள அனைத்து உண்மைகளும் வெளிக்கொண்டுவரப் படுவதில் இருந்தே, உயிரிழந்தவர்க ளுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதி நிலைநாட்டப்படும்.

இந்தத் தாக்குதலுக்கான நீதியைத் தாமதப்படுத்துவது, முழு நாட்டின் பாது காப்பையும் ஆபத்தில் விடுவதற்குச் சம மாகும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி அனுஷ்டிக்கப்படும் நிலையில், தாக்குதல் சம்பவத்துக்கு எதிராக எவர் மீதும் வழக் குத் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்க ளுக்கு நீதி, நியாயம் கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும் - என்றார்.

## கிறிஸ்தவ தேவாலய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட திருப்பலி ஒப்புக்கொடுத்தல் மற்றும் ஆரா தனை நிகழ்வுகளில் சர்வ மதத் தலை வர்களும் பங்கேற்றனர்.

இதனிடையே, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நினைவு கூர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்று காலை 08.45 மணிக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்தோடு, நாடு முழுவதும் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் திருப்பலி மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற் றன.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று 3 கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலுள்ள 3 ஹோட்டல்கள் உள் ளிட்ட இடங்களை இலக்கு வைத்து மேற் கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக் குதல்களில் 263 பொதுமக்கள் உயிரி ழந்ததோடு, 500 இற்கும் அதிகமா னோர் காயமடைந்தமையும் குறிப்பிடத் தக்கது.

## எதிர்க்கட்சியினர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த யாப்பா அபேவர்தன தலை மையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, மனுக்கள் சமர்ப்பணம் மற்றும் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர் ஒழுங்குப் பிரச்சினையை முன் வைத்த எதிர்க்கட்சியினர் அரசியல் பழி வாங்கல் விசாரணை ஆணைக்குழு வின் அறிக்கை மீதான விவாதம் தொடர் பாக சபாநாயகரிடம் கேள்வியெழுப்பி னர்.

நாளை நடைபெறவுள்ள குறித்த விவாதத்தில் எதிர்க்கட்சியினரே முதலில் உரையாற்ற வேண்டும் என்று எதிர்க் கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்தார்.

இதற்கு இடமளிக்க முடியாது என்று ஆளும் கட்சியினர் தெரிவித்த நிலையில் எதிர்க்கட்சியினர் சபையில் ஆர்ப்பாட் டத்தை முன்னெடுத்தனர். இதன்போது அங்கு அமைதியின்மை ஏற்பட்ட நிலை யில் சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்கள் சபாநாயகரால் ஒத்திவைக்கப்பட்டன.

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**
1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 021 492 7778

**இஞ்சி கன்று விற்பனைக்கு**
தரமான இஞ்சி கன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு 021 492 7778

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள குளிர்பான விநியோகஸ்த நிலையத்துக்கு SALES REP தேவை. மாதம் 45,000 சம்பாதிக்கலாம்.
தொடர்புகளுக்கு
0774737737/ 0773257747

விளம்பரத் தொடர்புகளுக்கு - மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com தொலைபேசி இலக்கம்- 076 443 8622




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சுகாதார விதிகளில் அரசியல்

“ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதர்களைக் கடிப்பது...” என்ற பேச்சு மொழி ஒன்று உண்டு.

அதன் அர்த்தத்தை ஆளும் மொட்டுக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் இப்போதுதான் உணரத் தொடங்கியிருப்பார்கள் போலும்.

கொரோனாப் பரவல் தடுப்பு மற்றும் சுகாதார விதிமுறைகளை ஆட்சித் தரப்பு தனது அரசியல் நோக்கங்களுக்கும் இலக்குகளுக்கும் முறையற்ற விதத்தில் – நேர்மையற்ற போக்கில் – இனவாதக் கண்ணோடு கையாள்கின்றது என இப்பத்தியில் கூட பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றோம்.

போரில் அநியாயமாகக் கொல்லப்பட்ட தனது உறவுகளுக்கு, ஒரு ஐந்து பேர் கூட ஒன்று சேர்ந்து விளக்கேற்றி அஞ்சலிக்க முற்பட்டாலே அதனை, கொரோனாப் பரவல் தடுப்பு விதிகளைக் காட்டி, நீதிமன்றத் தடைகளையும் வாங்கி, தடுக்க நடவடிக்கை எடுக்கின்றது பௌத்த, சிங்கள இனவாத அரசு என்று இப்பத்தியில் திரும்பத் திரும்பச் சுட்டியிருக்கின்றோம்.

சில தினங்களுக்கு முன்னர் கூட, அன்னைபூபதி நினைவை அனுஷ்டிக்க முயன்றவர்களுக்கு எதிராக நீதிமன்றத் தடையுத்தரவுடன் அன்னை பூபதியின் சமாதிப் பிரதேசத்துக்குப் பொலிஸார் வந்திருந்தனர் என்று செய்தி வெளியாகியிருந்தது.

அன்னை பூபதி, விடுதலைப் புலிப் போராளி அல்லர். ஆயுதம் தாங்கிய போராட்டத்தை வரித்துக் கொண்டவருமல்லர். ஒரு தமிழ்த் தாய் என்ற வகையில் – அதுவும் காந்தி காட்டிய சாத்வீக நெறியில் – போராடிய அஹிம்சைப் போராளி. அவரது போராட்ட வடிவமே சத்தியத்தின்பாற்பட்டது. அஹிம்சையின் அடிப்படையிலானது. அவரையோ அவரது போராட்டத்தையோ தடை செய்யப்பட்ட நடவடிக்கைகளோடு – இலங்கையின் சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளுடன் – தொடர்புபடுத்தவே முடியாது.

அத்தகைய ஒருவரை நினைவு கூர்வதைத் தடை செய்வதாயின் அதற்கும் கொரோனாத் தடுப்பு விதிகளையே கையில் எடுக்கிறது அரசு.

அன்னை பூபதி அம்மாள் நினைவை ஒட்டி அவரது சமாதியில் அஞ்சலி செலுத்துவதற்கான தடையைக் கூட கொரோனாத் தடுப்புத் தொடர்பான சுகாதார விதிமுறைகளின் கீழ்த்தான் பொலிஸார் பெற்றிருப்பர்.

இப்படி முறையற்ற விடயங்களுக்கு எல்லாம், தவறான முறையில் கொரோனாத் தடுப்புச் சட்ட விதிகளை அரசு ஏவி விடுகின்றது என்று தமிழர் தரப்புச் சுட்டிக் காட்டியபோது அது ஆளும் மொட்டுத் தரப்பின் பங்காளிக் கட்சிகளின் காதில் விழவில்லை.

இப்போது, ஆளும் கூட்டணியின் தலைமைக்கு எதிராக மற்றப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் கிளர்ந்தெழுந்திருக்கும் போது, அவர்களைக் கட்டுப்படுத்தவும் அதே கொரேனாத் தடுப்பு சுகாதார விதிகளையே ஏவி விடுகின்றது ஆட்சித் தலைமை.

இப்படி கொரேனாத் தடுப்பு சுகாதார விதிமுறைகளை தனது சொந்த அரசியல் லாபத்துக்கு அதிகாரத் தரப்பு பிரயோகிக்கின்றது என்பதை அத் தரப்பின் கூட்டணிக் கட்சிகளின் – பங்காளி அணிகளின் – தலைவர்கள் நேரடியாக பட்டுணரும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஆட்சித் தலைமையின் திமிர்ப் போக்குக்கு சரியான பதிலடி கொடுத்து, தமது பலத்தைக் காட்டும் இலக்கில் வரும் மே தின நிகழ்வுகளை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் சேர்ந்து நடத்தாமல் தனித்து நடத்துவதற்கு பங்காளிகள் கட்சிகள் தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளிலும் குதித்திருந்தன.

பங்காளிக் கட்சிகளில் ஒன்றான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, அதன் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் அவரின் சொந்த இடமான பொலன்னறுவையில் இதனை நடத்துவதற்குத் தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளையும் செய்து வந்தது.

ஆனால் திடீரெனக் கொரோனாத் தொற்றுப் பரவலைக் காட்டி மேதின ஊர்வலங்கள், கூட்டங்கள் எல்லாவற்றுக்கும் ஒரேயடியாக ஆப்பு வைத்து விட்டது அரசுத் தலைமைப் பீடம்.

நாட்டின் சுகாதார விதிகளைக் கூட ஆட்சிப் பீடம் தன் அரசியல் உள்நோக்கங்களுக்கு சாதுரியமாகப் பயன்படுத்துவதன் உண்மையான தாக்கத்தை – பாதிப்பை – அதன் கூட்டுக் கட்சிகள் இப்போதுதான் அனுபவப்பட்டு புரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிட்டியிருக்கின்றது.

ஆளும் கூட்டணியின் கூட்டுக் கட்சிகள் அரசுத் தலைமைக்குத் தமது அரசியல் பலத்தை எடுத்துரைப்பதற்கு கிட்டிய வாய்ப்பை கொரோனாப் பரவல் தடுப்புச் சட்ட விதிகளைக் காட்டி மறித்துள்ள அரசு, அடுத்த மாதத்தில் நயினாதீவில் நடத்த ஏற்பாடு செய்துள்ள தேசிய வெசாக் கொண்டாட்டத்துக்கு என்ன செய்யப் போகின்றது என்ற கேள்வி எழுகின்றது.

மே தினக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தினால் கொரோனா பரவும் ஆபத்து நேரும் என்றால் தேசிய வெசாக் தினத்தின் போது மட்டும் கொரேனா வைரஸ் லீவு போட்டு விட்டு விடுமுறையில் நின்று விடுமா? பார்ப்போம் அரசு என்ன செய்யப் போகின்றது என்பதை.

# மே தினப் பேரணிகள் நிறுத்தம் அரசின் முடிவுக்கு கடும் எதிர்ப்பு



அனைத்து மே தினப் பேரணிகளை நிறுத்துவதற்கான அரசாங்கத்தின் முடிவை மக்கள் விடுதலை முன்னணி எதிர்க்கின்றது என அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா நேற்று (செவ்வாய்க்கிழமை) தெரிவித்தார்.

தற்போதைய கொரோனா நிலைமை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக இருந்திருந்தால் இதற்கு முன்னர் இடைநிறுத்தப்பட வேண்டிய பல நிகழ்வுகள் இருந்தன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது சுகாதாரக் காரணங்களால் எடுக்கப்பட்ட முடிவு எனத் தெரிவிக்க முடியாது என குறிப்பிட்ட ரில்வின் சில்வா, ஏனெனில் பேரணி தொடங்குவதற்கான திட்டங்களை அரசாங்கம் ஏற்கனவே செய்திருந்தது என்றும் சுட்டிக்காட்டினார்.

பேரணிகளில் அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்கள் தெரிவிக்கப்படும் என்ற அச்சத்தில் அரசாங்கம் இதை அனுமதிக்கவில்லை எனத் தாம் சந்தேகிப்பதாகவும் ரில்வின் சில்வா குற்றம் சாட்டினார்.

# கடற்றொழில் துறையை மேம்படுத்த நோர்வேயின் ஒத்துழைப்பு வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்ய நவீனமயப்பட்ட ஒத்துழைப்புக்களை இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என நோர்வேயிடம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் மீன் வள ஆய்வுகளை மேற்கொள்வது நாட்டின் கடற்தொழிலாளர்களுக்கும் கடற்றொழில் துறைக்கும் ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பில் மீன் வள ஆய்வுகளை மேற்கொள்வதற்கான இணைந்த வேலைத் திட்டம் ஒன்றை கடற்றொழில் அமைச்சு மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதரகம் ஆகியன இணைந்து ஆரம்பித்திருந்தன.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ரைன் ஜோன்லிஸ்கெண்டல், கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

கடற்றொழில் துறையில் இலங்கையும் நோர்வேயும் நீண்டகால பரஸ்பர உறவுகளைக் கொண்டிருப்பதுடன் கடற்றொழிலாளர்கள் வாழ்வாதாரம் மற்றும் உள்நாட்டு பொருளாதாரம் ஆகியவற்றையும் உறுதி செய்வதிலும் கவனம் செலுத்துகின்றன.

அதுமட்டுமல்லாது அதிகளவு கடல் வளங்களைக் கொண்ட தீவாக இலங்கை காணப்படுவதால் அந்த வளங்களை நிலைபேறான வகையில் பேணுவது அரசாங்கத்தின் குறிக்கோளாக உள்ளது.

அதனடிப்படையில் இத்தகைய ஆய்வுகள் அடிப்படையிலான மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தைப் பிரயோகித்து அந்தத் துறையை ஊக்குவிப்பதற்கும் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

சவால்கள் நிறைந்த தற்போதைய சூழ்நிலையிலும் தொடர்ச்சியாக இலங்கைக்கு ஆதரவு வழங்கியமைக்காக நோர்வே அரசாங்கத்துக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். - என குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் தடைப்படலாம்

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 21

சுகாதார வழிகாட்டுதல்கள் கடுமையாகப் பின்பற்றப்படாவிட்டால் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம் என சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில், பொறுப்பான முறையில் செயற்படத் தவறியமை மற்றுமொரு கொத்தணிக்கு வழிவகுக்கும் என தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

எனவே கொரோனாத் தொற்று பரவுவது தொடர்பாகப் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்றும் அனைத்து நேரங்களிலும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவ்வாறு செய்யத் தவறினால் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் தடைப்பட வழிவகுக்கும் என்றும் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

மேலும் கொரோனாத் தொற்று அறிகுறி கொண்டவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லுமாறும் அவர்கள் சமூகத்துடனான தொடர்பைத் தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# கொரோனாத் தடுப்பூசி பற்றாக்குறை இல்லை



கொழும்பு, ஏப். 21

இரண்டாம் கட்டமாக தடுப்பூசி செலுத்துவதற்கு தடுப்பூசி பற்றாக்குறை காணப்படுகின்றது என வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை என அமைச்சரவை இணை பேச்சாளர், அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தின் காரணமாக கொரோனாத் தொற்று மீண்டும் அதிகரிப்பதற்கான ஆபத்து இருந்தாலும், அதைச் சமாளிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், இந்நிலைமை தொடர்பாக அச்சம்கொள்ளத் தேவையில்லை என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரண குறிப்பிட்டார்.

மேலும் தொற்றின் முதல் மற்றும் இரண்டாவது அலைகளை சுகாதார அமைச்சு அதே வழியில் கட்டுப்படுத்தியுள்ளது என்றும் தற்போதைய நிலைமை தொடர்பாக அரசாங்கம் அவதானம் செலுத்துகின்றது எனவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஒக்சிஜன், தடுப்பூசி, மருந்து பற்றாக்குறை மத்திய அரசின் தோல்வி - பிரியங்கா காந்தி



'மத்திய அரசின் சரியான திட்டமிடுதல் இல்லாததால்தான் தடுப்பூசி, ரெம்டெசிவர் மருந்து, ஒக்சிஜன் போன்ற அவசர, அத்தியாவசிய தேவைகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது. இது அரசாங்கத்தின் தோல்வி!' என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொரோனா இரண்டாம் அலையை எதிர்கொள்வதில் மத்திய அரசின் தோல்வி என்று தெரிவித்து அவர் மூன்று விடயங்களைப் பட்டியலிட்டுளளார்.

உலகிலேயே இந்தியாவில்தான் ஒக்சிஜன் உற்பத்தி அதிகம் நடக்கிறது. அப்படி இருக்கையில் ஏன் இங்கு கடும் ஒக்சிஜன் பற்றாக்குறை நிலவுகிறது?. கொரோனா முதல் அலை மற்றும் இரண்டாவது அலைக்கு இடையில் உங்களுக்கு 8 - 9 மாதங்கள் இருந்தன. அப்படியிருந்தும் ஏன் போதிய ஒக்சிஜன் உற்பத்தி செய்யாமல் நீங்கள் அதை புறக்கணித்தீர்கள்? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

'இன்று, இந்தியாவில் 2,000 லொறிகள் அளவில் மட்டுமே ஒக்சிஜன் சிலின்டர்கள் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது. எல்லா இடங்களிலும் ஒக்சிஜன் பற்றாக்குறை நிலவுகிறது. எந்த இடத்துக்கும் சரிவர ஒக்சிஜன் கிடைப்பதில்லை. கடந்த 6 மாதங்களில் 1.1 மில்லியன் ரெம்டெசிவர் ஊசிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. ஆனால், இப்போது நாம் ரெம்டெசிவர் மருந்துப் பற்றாக்குறையை எதிர்கொள்கிறோம்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

'ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை அரசு 6 கோடி தடுப்பூசிகளை ஏற்றுமதி செய்தது. ஆனால், இந்தக் காலகட்டத்தில் 3 - 4 கோடி இந்தியர்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடப்பட்டது. தடுப்பூசி செலுத்துவதில் இந்தியர்களுக்கு ஏன் முன்னுரிமை வழங்கவில்லை?' என்று இன்னுமொரு கேள்வியையும் அவர் தொடுத்துள்ளார்.

மோசமான திட்டமிடல் காரணமாகவும், தொலைநோக்குப் பார்வை இல்லாததாலும் இந்தப் பிரச்சனைகள் தோன்றியுள்ளதாகவும் இது அரசாங்கத்தின் தோல்வி என்றும் பிரியங்கா காந்தி குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கிறார்.

## ஒக்ஸிஜனை இலவசமாக வழங்க அனுமதிக்க வேண்டுமாம் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் மனுத்தாக்கல்!




இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 2,95,041 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 1,56,16,130 ஆக அதிகரித்துள்ளது. இந்தியாவில் இதுவரை 13,01,19,310 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனைத்தொடர்ந்து தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் இரவு நேர ஊரடங்கை அமுல்படுத்தப்பட்டுள்ளன. டெல்லி உள்ளிட்ட சில மாநிலங்கள் ஒரு வாரகால முழு ஊரடங்கை அறிவித்துள்ளன. நாடு முழுவதும், மருத்துவ சேவைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேபோல கொரோனா நோயாளிகளை காப்பாற்றும் வகையில் ஒக்சிஜன் உற்பத்தியை அதிகரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ரயில்களில் ஒக்சிஜன் கொண்டு செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஸ்டெர்லைட் ஆலை வளாகத்தில் ஒக்சிஜன் தயாரித்து இலவசமாக வழங்க அனுமதிக்க வேண்டும் என்று ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் உச்சநீதிமன்றத்தில் இடைக்கால மனுத் தாக்கல் செய்துள்ளது.

'தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையில் தினசரி 1,050 தொன் ஒக்சிஜன் உற்பத்தி செய்யும் அலகு உள்ளது. இது, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் உத்தரவின்படி மூடப்பட்டுள்ளது. தமிழக அரசு உத்தரவின்படி, செம்பு ஆலையும் மூடப்பட்டுள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில் ஒக்சிஜன் தயாரிப்பு அலகை இயக்க அனுமதிக்க வேண்டும். அவ்வாறு இயக்கப்படும் பட்சத்தில் ஒக்சிஜனை தயாரித்து இலவசமாக வழங்குவோம். இது மாநில அரசுக்கு உதவியாக இருக்கும். மேலும் கொரோனாத் தொற்றால் நாட்டில் தற்போது நிலவும் ஒக்சிஜன் தேவையை ஈடுசெய்யலாம்,' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்த மனு விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையைச் சுற்றியுள்ள பகுதி மக்கள் உடல் நலம் பாதிக்கப்படுவதாகவும் சுற்றுச்சூழல் மாசடைவதாகவும் தொடரப்பட்ட வழக்குகள், போராட்டங்களையடுத்து கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டுள்ளமையும் அதனை மீளத் திறக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மக்களின் எதிர்ப்புகளால் கைவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## டெல்லி முதல்வரின் மனைவிக்கு கொரோனாத் தொற்று உறுதி!



இந்தியாவில் கொரோனா அதிகம் பாதித்த மாநிலங்களில் ஒன்றாக டெல்லி உள்ளது. கொரோனா இரண்டாம் அலையின் பாதிப்புகள் டெல்லியில் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகிறது. கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் 23,686 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர், 240 உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலின் மனைவிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மனைவிக்கு தொற்று உறுதியானதை அடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரவிந்த் கெஜ்ரிவால் தன்னையும் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

## இந்தியா - பிரிட்டன் விமானச் சேவைகள் 24 முதல் 30 ஆம் திகதி வரை இரத்து!

எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 30 வரை பிரிட்டனுக்கு இயக்கவிருந்த அனைத்து விமானங்களும் ரத்துச் செய்யப்படுகின்றது என ஏர் இந்தியா தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் இருந்து இந்தியா வரவும், இந்தியாவில் இருந்து பிரிட்டன் செல்லவும் பட்டியலிடப்பட்ட விமானப் பயணங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவில் அண்மைய நாள்களில் கொரோனா பரவல் தீவிரமாக அதிகரித்து வருவதால் சிவப்புப் பட்டியலில் இந்தியாவை பிரிட்டன் சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## ராகுல் காந்திக்கு கொரோனா உறுதி!



காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கொரோனாவின் இரண்டாவது அலை வேகமாகப் பரவி வரும் நிலையில், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் வயநாடு தொகுதியின் எம்.பியுமான ராகுல் காந்திக்கு கொரோனாத் தொற்று இன்று லேசான அறி குறிகளுடன் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

அவருடன் தொடர்பில் இருந்த அனைவரையும் பரிசோதித்துக்கொள்ளும்படியும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். இதற்கு முன்னதாக, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அவர் விரைவாகக் குணமடையவேண்டி ராகுல் காந்தி தனது டுவிட்டரில் பதிவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பஸ் செலுத்துனர்கள், நடத்துநர்கள் கொரோனாத் தடுப்பூசி போடுவது கட்டாயம்

சென்னை மாநகர பஸ் சாரதிகளும் நடத்துநர்களும் கட்டாயம் கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என மாநகராட்சி போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் இளங்கோவன் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

சென்னையில் 3000 பஸ்களில், 6,300 சாரதிகளும் நடத்துநர்களும் பணியாற்றி வருகின்றனர். கொரோனா பரவல் அதிகமாக உள்ள சூழலில் பொது மக்களுடன் தினமும் நேரடியாக தொடர்பில் இருப்பதால், 45 வயதிற்கு மேற்பட்ட பேருந்து செலுத்துனர்களும் நடத்துநர்ளும் முதற்கட்டமாக தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சென்னை புறநகர் மின்சார ரயில் சேவை ஊரடங்கால் சேவை நேரங்களில் மாற்றம்



தமிழகத்தில் இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளதால் சென்னை புறநகர் மின்சார ரயில் சேவை நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த நேற்று முதல் தமிழகம் முழுவதும் இரவு நேர ஊரடங்கு அமுலுக்கு வந்தது. இந்த ஊரடங்கு இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை அமுலில் இருக்கும். அதேபோல், ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு அமல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில், அரசு மற்றும் தனியார் பஸ் போக்குவரத்து, வாடகைக் கார், ஆட்டோ மற்றும் தனியார் வாகனங்களுக்கு அனுமதி கிடையாது. வெளிமாநிலங்கள் மற்றும் வெளி மாவட்டங்களுக்கான பஸ் போக்குவரத்துக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சென்னை புறநகர் மின்சார ரயில் சேவையிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை கோட்டத்திற்கு உட்பட்டு சென்னை புறநகர் மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. இதில் மொத்தம் 672 ரயில் சேவைகள் இயக்கப்பட்டு வந்தன. தற்போது இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளதால் 672ஆக இருந்த சென்னை புறநகர் ரயில் சேவை 434 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை எந்த புறநகர் ரயில் சேவையும் இயங்காது என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

வழக்கமாக இரவு 12 மணி வரை ரயில் சேவை இயங்கினாலும் தற்போது ஊரடங்கு காரணமாக இரயில் சேவை இரவு 10 மணியுடன் நிறுத்தப்பட்டுள்ளது. அதேபோல், அதிகாலை 3 மணிக்கு ஆரம்பிக்கும் சேவை தற்போது அதிகாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானில் 5 நாள் வன்முறையில் அப்பாவி மக்கள் 39 பேர் கொன்று குவிப்பு



ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் கொட்டம் இன்னும் அடங்கவில்லை. ஒரு பக்கம் பேச்சுக்கள், மற்றொரு பக்கம் வன்முறை என்பது அவர்களின் வழக்கமாக உள்ளது.

இந்த நிலையில் அங்கு பரா, பர்வான், நர்கர்ஹார், காந்தஹார் ஆகிய மாகாணங்களில் கடந்த 5 நாள்களில் நடந்த வன்முறை சம்பவங்களில் அப்பாவி மக்கள் 39 பேர் கொன்று குவிக்கப் பட்டுள்ளனர் என ஆப்கானிஸ்தான் சுதந்திர மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த வன்செயல்களில் இறந்தவர்கள் மற்றும் காயம் அடைந்தவர்களில் பெண்களும், குழந்தைகளும் அடங்குவார்கள் எனவும் அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான உயிர்ப்பலிகள் குண்டு வெடிப்பு மற்றும் தலிபான் பயங்கரவாதிகள் தாக்குதல்களில் ஏற்பட்டவை என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. தலிபான்கள் தங்களுடைய தாக்குதல்களை நியாயப்படுத்துகின்றனர்.

இதையொட்டி அந்த அமைப்பின் செய்தி தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாகித் கூறும்போது, ரமழான் அல்லது பிற மாதங்களில் போர் இருப்பது ஒரு பொருட்டல்ல. ரமழான் மாதத்தில் அரசு படைகள் மீது தாக்குதலை நிறுத்துமாறு கூற மாட்டேன். சண்டை நிறுத்தத்துக்கு இன்னும் அதிக நேரமும், ஒப்பந்தங்களும் தேவை. எங்கள் நியாயமான குறிக்கோள்கள் போரின்றி பெறப்படும் என்பதை நாங்கள் உறுதிப்படுத்த வேண்டும் என குறிப்பிட்டார்.

அதே நேரத்தில் தங்கள் போராளிகள், அப்பாவி பொதுமக்களை இலக்காக வைத்து தாக்குதல் நடத்த மாட்டார்கள் என தெரிவித்தார்.

## ஜோர்ஜ் பிளாய்ட் கொலை வழக்கு;

# பொலிஸ் அதிகாரி டெரிக் சாவின் குற்றவாளி எனத் தீர்ப்பளிப்பு!

அமெரிக்காவின் மினசோட்டா மாகாணத்தின் மினியாபொலிஸ் நகரைச் சேர்ந்தவர் ஆபிரிக்க அமெரிக்கரான ஜார்ஜ் பிளாய்ட். லொறி சாரதியான இவர் கடந்த ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி மினியா பொலிஸ் நகரில் உள்ள ஒரு கடைக்குச் சென்று பொருள்களை வாங்கினார்.

அப்போது அவர் வழங்கிய பணத்தில் 20 டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் ரூ.4,000) கள்ளநோட்டு இருக்கின்றது என கடையின் ஊழியர் பொலிஸுக்கு தகவல் கொடுத்தார். அதன் பேரில் பொலிஸ் அதிகாரி டெரிக் சாவின் தலைமையில் 4 பொலிஸார் அங்கு விரைந்தனர். பின்னர் அவர்கள் புகார் தொடர்பாக விசாரிக்க அழைத்தபோது பிளாய்ட் பொலிஸ் வாகனத்தில் ஏற மறுத்தார் எனத் தெரிகிறது.

இதையடுத்து பொலிஸ் அதிகாரி டெரிக் சாவின் ஜார்ஜ் பிளாய்ட்டை தரையில் கிடத்தி அவர் கழுத்தை முழங்காலால் அழுத்தினார். என்னால் மூச்சுவிட முடியவில்லை எழுந்திருங்கள் என ஜார்ஜ் பிளாய்ட் கெஞ்சிய போதும் விடவில்லை. சிறிது நேரத்தில் ஜார்ஜ் பிளாய்ட் உயிரிழந்தார்.

ஜோர்ஜ் பிளாய்ட் கழுத்தில் பொலிஸ் அதிகாரி கால் முட்டியை வைத்து அழுத்தியது, இதனால் அவர் மூச்சுவிட முடியாமல் திணறி உயிரிழந்தது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி வைரலானது.

இதனைத் தொடர்ந்து ஜோர்ஜ் பிளாய்டின் சாவுக்கு நீதி கேட்டு அமெரிக்கா முழுவதும் பெரும் போராட்டம் வெடித்தது. இனவெறிக்கு எதிராகவும் போலீசாரின் காட்டுமிராண்டித்தனத்தை கண்டித்தும் நடந்த இந்தப் போராட்டங்கள் அமெரிக்காவையே உலுக்கியது.

இதற்கிடையே ஜார்ஜ் பிளாய்டின் குடும்பத்தினர்



இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் அதிகாரி டெரிக் சாவின் உள்பட 4 பொலிஸார் மற்றும் மினியாபொலிஸ் நகர நிர்வாகத்துக்கு எதிராக நீதி மன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

இதில் டெரிக் சாவின் உள்பட 4 பொலிஸாரும் பணிநீக்கம் செய்யப்பட்டு, கொலை வழக்கில் கைது செய்யப்பட்டனர். டெரிக் சாவின் மீது கொலை குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. டெரிக் சாவின் மீதான விசாரணை மினசோட்டாவின் ஹென்னெபின் நகரில் உள்ள மாவட்ட நீதிமன்றில் தொடங்கி நடைபெற்றது.

இந்நிலையில், இந்த வழக்கு விசாரணையின் முடிவில் பொலிஸ் அதிகாரி டெரிக் சாவின் குற்றவாளி என நிரூபணம் செய்யப்பட்டு உள்ளது. அவரின் குற்றத்துக்கான தண்டனை விவரம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜோர்ஜ் பிளாய்ட் கொல்லப்பட்ட வழக்கில் குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் அவருக்கு 40 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

## நீதி வென்றுவிட்டது எனக்கூறி தீர்ப்பை கொண்டாடும் மக்கள்



ஜோர்ஜ் பிளாய்ட் கொல்லப்பட்ட வழக்கில் விசாரணையின் முடிவில் பொலிஸ் அதிகாரி டெரிக் சாவின் குற்றவாளி என நிரூபணம் செய்யப்பட்டு உள்ளது. அவரின் குற்றத்துக்கான தண்டனை விவரம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜார்ஜ் பிளாய்ட் கொல்லப்பட்ட வழக்கில் குற்றம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் அவருக்கு 40 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

இந்த தீர்ப்பை ஜார்ஜ் பிளாய்டின் குடும்பத்தினர் மட்டுமன்றி பல்வேறு தரப்பினரும் வரவேற்றுள்ளனர். தீர்ப்பைக் கேட்டதும் ஜார்ஜ் பிளாய்டுக்கு மரியாதை செலுத்தியும், கண்ணீர் மல்க நீதித்துறைக்கு நன்றி தெரிவித்தும் கொண்டாடிவருகின்றனர். நீதி வென்று விட்டது எனப் பலரும் கருத்து பதிவிட்டுவருகின்றனர்.

இந்த தீர்ப்பு பலருக்கு கிடைத்த வெற்றி என்றும், இன்று நாம் மீண்டும் சுவாசிக்க முடிகிறது என்றும் ஜோர்ஜ் பிளாய்டின் குடும்பத்தினர் கூறி உள்ளனர். ஆனால் நீதிக்கான போராட்டம் இன்னும் முடிவடையவில்லை என்றும் குறிப்பிட்டனர்.

ஜோர்ஜ் பிளாய்டுக்காக மட்டும் போராடவில்லை, உலகில் உள்ள ஒவ்வொருவருக்காகவும் போராடுகிறேன் என அவரது சகோதரர் கூறி உள்ளார்.

## சொந்தமாக விண்வெளி நிலையத்தை 2025 இற்குள் அமைக்க ரஷ்யா முடிவு



வரும் 2025 ஆம் ஆண்டுக்குள் சொந்தமாக விண்வெளி நிலையத்தை அமைக்க முடிவு செய்திருக்கிறது என ரஷ்யா தெரிவித்துள்ளது.

தற்போது பூமிக்கு மேல் சுழலும் சர்வதேச விண்வெளி நிலையம் கடந்த 1998 இல் ரஷ்யா மற்றும் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களால் கூட்டாக அமைக்கப்பட்டது.

கடந்த பல ஆண்டுகளாக இந்த 2 நாடுகளுடன் கனடா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய விண்வெளி ஆய்வாளர்கள் இதில் தங்கி பல ஆய்வுகளை நடத்தியுள்ளனர்.

இந்த நிலையம் இன்னும் இரண்டு ஆண்டுகளில் அதன் செயல்திறனை இழந்து அதன்பின்னர் 2030 இற்கும் 2050 இற்கும் இடையே பூமியில் எங்காவது ஒரு இடத்தில் விழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே நிலவும் அரசியல், வர்த்தக பனிப்போர் காரணமாக, புதிய சர்வதேச விண்வெளிநிலைய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டாம் என ரஷ்யா முடிவு செய்துள்ளது.

## உலகிலேயே மிகப்பெரிய 5ஜி கோபுரம் அமைக்கும் பணியில் சீனா தீவிரம்

உலகிலேயே மிகப்பெரிய 5ஜி இணையத்தளவசதியைகட்டமைத்துவரும் சீனா, base station எனப்படும் டவரை உருவாக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

5ஜி இணையத்தள வசதியை நோக்கி பயணிக்க தொடங்கியுள்ள சீனா, அதனை பயன்படுத்துவதற்கு ஏதுவாக, முக்கிய நகரங்களில் டவரை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டுவருகிறது. கடந்த பெப்ரவரி வரை 7 லட்சத்து 92 ஆயிரம் 5ஜி டவர்கள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும், இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 6 லட்சம் டவர்கள் அமைக்கப்படும் என்றும் சீனத் தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இரண்டாம் பாதியில் சீனாவுக்குள் உற்பத்தியாகும் மொபைல்களில் 80 சதவீதம் 5ஜி மொபைலாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

## கிளர்ச்சியாளர்களுடன் நடந்த மோதலில் ஆப்பிரிக்க நாடான சாட் நாட்டு அதிபர் சாவு



ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான சாட் நாட்டில் 30 ஆண்டுக் காலமாக அதிபர் பதவி வகித்து வந்தவர், இத்ரிஸ் டெபி இட்னோ. இவருக்கு வயது அறுபத்தியெட்டு. இவர் அங்கு கிளர்ச்சியாளர்களுடன் நடந்த சண்டையில் போர்க்களத்தில் நேற்று கொல்லப்பட்டார் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

கடந்த 11 ஆம் திகதி நடந்த அதிபர் தேர்தலில் அவர் வெற்றி பெற்றார் என தேர்தல் அதிகாரிகள் அறிவித்த சில மணி நேரத்தில், இந்த அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகி உள்ளது.

அடுத்த 6 ஆண்டுகளுக்கு அதிபராகத் தொடர வேண்டியவர், போர்க்களத்தில் கொல்லப்பட்டிருப்பது அங்கு மிகுந்த சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. அங்கு அடுத்த 18 மாதங்களுக்கு அவரது மகன் மகாமத் இத்ரிஸ் டெபி இட்னோ தலைமையிலான இடைக்கால கவுன்சில் நாட்டை நிர்வகிக்கும் என்று இராணுவம் அறிவித்துள்ளது.

மேலும், அங்கு இரவு நேர ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றமும் கலைக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் கூறுகின்றன.

இராணுவ அதிகாரியாக இருந்து நாட்டின் அதிபராக உயர்ந்தவர் இத்ரிஸ் டெபி இட்னோ என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் ஒன்றாகச் செயற்பட தொடங்க வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவிப்பு





தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்று நாங்கள் சிந்தித்தாலும், முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் அவ்வாறு சிந்திப்பதாக இல்லை. சில முஸ்லிம் அரசியல்வாதிகள் எமக்கு ஒரு முகமும் இந்த அரசுக்கு ஒரு முகமும் காட்டும் செயற்பாடுகளையே மேற்கொள்கின்றார்கள். இந்நிலை எதிர்காலத்தில் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்த முடியாத நிலைமையையே ஏற்படுத்தும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருக்கோவில் பிரதேசக் கிளை புனரமைப்பு தொடர்பான கலந்துரையாடலில் நேற்று மாலை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது தமிழ் மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வந்திருக்கின்றார்கள். இந்த நாட்டிலே ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண்டுமாயின் எமது இந்த ஜனநாயக ரீதியான அரசியலை பலப்படுத்த வேண்டும்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் இந்த நாட்டிலே தமிழர்கள் அடக்கப்பட்டதும், ஒடுக்கப்பட்டதும், பல இடம்பெயர்வுகள் இடம்பெற்றமையும் யாருமே மறுக்க முடியாதவை. இந்த நாட்டில் எமது இனமும் ஜனநாயக ரீதியாக வாழ வேண்டும். நீண்ட வரலாற்றினைக் கொண்ட எமது இனம் இந்த மண்ணிலே நிலையாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் எமது இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டு செயற்படுகின்றது.

இந்த நாட்டின் ஜனநாயகம் பொருந்திய ஒரு கட்சியாக எமது கட்சி இருக்கின்றது. நாங்கள் எந்த விடயத்திலும் சோரம் போய் எமது சமூகத்தைச் சிரழிக்கும் விடயத்திற்கு ஒருபோதும் முன்நிற்கவில்லை. தற்போது மிகவும் மோசமானதொரு அடக்கு முறையை எமது தமிழ் சமூகம் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. நாங்கள் இறை வழிபாட்டைக் கூட சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத ஒருநிலைமை இன்று இந்த நாட்டிலே நிலவுகின்றது. இந்து ஆலயம் அமைப்பதென்றால் பல இழுத்தடிப்புகளும், பௌத்த ஆலயம் அமைப்பதென்றால் உடனடி நடைமுறைகளுமே இங்கு இடம்பெறுகின்றது.

நாங்கள் வடக்கு கிழக்கு என்ற ரீதியில் மாத்திரமல்லாமல் இலங்கையில் வாழும் அனைத்து தமிழ் பேசும் மக்களுக்குமான ஒரு தீர்வை வேண்டி நிற்கின்ற போது எங்களோடு தமிழ் பேசும் உறவுகளாக இருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள் எமக்கு ஒரு முகமும் இந்த அரசுக்கு ஒரு முகமும் காட்டும் செயற்பாடுகளையே மேற்கொள்கின்றார்கள். கடந்த காலங்களிலும் எம்மோடு ஜனநாயக ரீதியான விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என்று எம்மிடம் தெரிவித்து விட்டு அதற்கு மாறாக அரசுடன் இணைந்த சம்பவங்களே பல இடம்பெற்றுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் செயற்பட்டிருந்தாலும் கிழக்கில் இருக்கின்ற ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களுடைய சுய நலன்களுக்காக எமது சமூகத்தில் இருக்கின்ற சில அதிகாரங்களை இல்லாமல் செய்வதற்காக இப்போதும் முனைப்பான முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். குறிப்பாக கல்முனைத் தமிழ் பிரதேச செயலகம் என்ற அதிகாரத்தினை இல்லாமல் செய்வதற்கான வேலைத்திட்டத்தினை ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் முன்னெடுப்பதென்பது மிகவும் ஒரு மன வேதனையான விடயம்.

முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்பில் எமது கட்சி பல முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையில் கூட முஸ்லிம் சமூகம் சார்ந்த விடயங்களை எமது கட்சி முன்னெடுத்திருந்தது. இந்த நாட்டிலே ஜனநாயகம் நிலைக்க வேண்டும் என்பதற்காகத் தான் நாங்கள் இந்த அரசை எதிர்க்கின்றோம். அவர்களுடன் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்த நாட்டிலே இருக்கின்ற சில முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களுக்குச் சாதகமான விடயங்களைச் சாதிப்பதென்பது எதிர்காலத்தில் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்த முடியாத நிலைமையே ஏற்படுத்தும். அதனையே அவர்கள் முன்னெடுக்கின்றார்கள். நாங்கள் மனவேதனைப்படுகின்றோம்;.

இவ்வாறான செயற்பாடுகளை அவர்கள் நிறுத்த வேண்டும். தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் நாங்கள் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்று நாங்கள் சிந்தித்தாலும், முஸ்லிம் அரசியல்வாதிகள் அவ்வாறு சிந்திக்கவில்லை. எனவே எதிர்காலத்தில் நாங்கள் எமது செயற்பாடுகளை தூரநோக்குக் கொண்டு அமைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

# முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் துன்பப்படக்கூடாது கிண்ணியா நகரசபை உறுப்பினர் வேண்டுகோள்



முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கும் அச்சமும் அழுத்தங்களும் இல்லாமல் செய்யப்பட வேண்டும் என கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம்.எம்.மஹ்தி அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிண்ணியா நகர சபையின் அமர்வில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் இந்த நாட்டிலே வாழுகின்ற சிறுபான்மை சமூகமாகிய அப்பாவி முஸ்லிம் சமூகம் பல்வேறு சொல்லொணாத் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் முகம் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் இந்த அப்பாவி முஸ்லிம் சமூகம் திட்டமிட்டு தாக்கப்படுகின்றார்கள்.

முஸ்லிம் தலைமைத்துவங்கள், கல்விமான்கள், உலமாக்கள் போன்றோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள். இஸ்லாமிய இயக்கங்களை தடை செய்தல், அவர்களுடைய சொத்துக்களை அரசுடமை ஆக்குதல், பள்ளிகளை மூடுதல், 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாத்திரம் தொழுகைக்கு அனுமதிக்கப்படுதல், மதரஸாக்களை மூடுதல் போன்ற பல்வேறு சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அரங்கேற்ற படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

பள்ளிகளிலும் மதரஸாக்களிலும் அடிப்படை வாதம் மத வாதம் போதிக்கப்படுகிறது என குற்றம் சாட்டப்படுகின்றது. அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் பொய்யாக குறைகள் காணப்படுகின்றது.

ஆனாலும் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமே தவிர நிரபராதிகள் தண்டிக்கப்படக் கூடாது. முஸ்லிம் சமூகம் மாத்திரம் வீணாக பழி வாங்கப்படுகிறார்கள். சட்டம் என்பது எல்லோருக்கும் சமமாக பயன்படுத்தப்பட வேண்டும்.


இவ்வாறான சூழ் நிலையில் முஸ்லிம்கள் மிக நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். முஸ்லிம் தலைமைகளும் உலமா சபையும் பெரும்பாண்மை சமூகத்திற்கும், ஆட்சியாளர்களுக்கும் அல் குர்ஆன், ஹதீஸ், மதரஸாக்கள், பள்ளிகள் பற்றி தெளிவு படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொலீஸாரும், பாதுகாப்புத்தரப்பினரும், பௌத்த மதகுருமாரும் அல் குர்ஆன், ஹதீஸ், பற்றி அறிந்து கொள்ள வேண்டும். மதரஸாக்கள் , பள்ளிகளுக்குள் சென்று அங்கு நடப்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் இந்த முஸ்லிம்களின் அப்பாவித் தனத்தை அவர்கள் அறியவேண்டும். அது பௌத்த மக்களுக்கு தெளிவுபடுத்தப் பட வேண்டும். இதற்கான பொறிமுறையை அரசாங்கமும் நாமும் இணைந்து செயற்படுத்த வேண்டும்.

இல்லாவிடின் இந்த முஸ்லிம்கள் மீதான பெரும்பான்மை மக்களின் சந்தேகம் குறையப் போவதில்லை. கடும் போக்காளர்களின் துவம்சம் கட்டுப்படப் போவதில்லை. இனவாத அரசியல் செய்வோர் இதை கைவிடப் போவதுமில்லை. நாட்டின் அழிவை நோக்கிய பயணம் நிறுத்தப்படப் போவதுமில்லை.

எனவே பொது மக்களிடையே அச்சமின்றி வாழ்வதற்கும் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கும் இனங்களுக்கிடையிலான அச்சத்தையும் வீண் சந்தேகத்தையும் போக்க அரசாங்கமும் சமூகத் தலைவர்களும் செயற்படத் தயாராக வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# கிண்ணியா கடல் மேல் பாலம் தினமும் இருளில் மூழ்கியுள்ளது



திருகோணமலை மாவட்டம் கிண்ணியா கடல் மேல் பாலத்தில் ஊடான பகுதியில் வீதி மின் விளக்குகள் இயங்காமை காரணமாக இருள் சூழ்ந்த பகுதியாக உள்ளது.

இந்த பாலமூடாக பயணிப்போர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதுடன் பல நாள்களாக குறித்த பாலத்தின் இரு மருங்கிலும் உள்ள மின் விளக்குகள் ஒளிர்வதில்லை எனவும் தெரியவருகிறது.

இவ் வீதியானது திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதிஇது என்பதால் நாளாந்தம் நூற்றுக் கணக்கான வாகனங்கள் இதன் ஊடாகவே பயணிக்கிறன கிண்ணியா நகர சபையின் கீழ் பராமரிக் கப்பட்டு வந்த இப் பால மின் விளக்கு கள் தற்போது ஒளிர்வதில்லை .சுமார் 398 மீற்றர் தூரம் கொண்ட குறித்த பாலமானது இருள் சூழ்ந்த பகுதியாக காணப்படுவதனால் விபத்துகளும் ஆபத்துகளும் ஏற்பட வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது .

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஞாபகார்த்தமாக மட்டக்களப்பில் இரத்ததான நிகழ்வு





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் உயிர் நீத்தவர்களின் ஞாபகார்த்தமாக இன்று புதன்கிழமை மட்டக்களப்பில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை, சீரி, கரிதா அறக்கட்டளை, தேசிய இளைஞர் சேவை மன்றம், உள்ளிட்ட பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன், மட்டக்களப்பு தாண்டவன்வெளி பெடினன்ஸ் மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

அரங்கத்தில் இரத்த நன்கொடையாளர்கள் அனைவரும், மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

'கடந்த 21.04.2019 அன்று உதிரம் சிந்தி உயிர் நீத்த எம் உறவுகளின் இரண்டு ஆண்டு நினைவாக எங்கள் உதிரம் கொடுத்து அஞ்சலி செலுத்துவோம்' எனும் கருத்தின் கீழ் இதன் போது பல இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவு இரத்த நன்கொடைகளைப் பெற்றுக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி திட்டமிட்டபடி நடக்கும் - ஐ.சி.சி. உறுதி!




முதலாவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் சுற்றின் இறுதிப்போட்டி இங்கிலாந்தின் சவுத்தம்டன் நகரில் ஜூன் 18முதல் 22 வரை நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது. புள்ளிப் பட்டியலில் முதல் இரு இடங்களைப் பிடித்த இந்தியா- நியூசிலாந்து அணிகள் இந்தப் போட்டியில் மோதுகின்றன.

இந்த நிலையில், இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு நாளுக்கு நாள் புதிய உச்சத்தை எட்டுவதால் இந்தியாவில் இருந்து தங்கள் நாட்டைச் சாராதவர்கள் யாரும் இங்கிலாந்துக்குள் வர அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது. இதனால், இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் அங்கு செல்வது சாத்தியமாகுமா? என்ற கேள்வி ஊடகங்களால் எழுப்பப்பட்டிருக்கிறது.

இதற்குப் பதிலளிக்கும் முகமாக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியை திட்டமிட்டபடி நடத்துவோம் என்று சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) உறுதிபடக் கூறியுள்ளது.

'கொரோனா பரவலுக்கு மத்தியில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை எப்படி பாதுகாப்புடன் வெற்றிகரமாக நடத்துவது என்பதை இங்கிலாந்து கிரிக்கெட் சபையும் ஏனைய நாட்டு கிரிக்கெட் நிர்வாகங்களும் செய்து காட்டியுள்ளன. அதையே தொடர்ந்து நடைமுறைப்படுத்த முடியும் என்று நம்புகிறோம். எனவே திட்டமிட்டபடி இங்கிலாந்தில் ஜூன் மாதம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி நடைபெறும். இது குறித்து இங்கிலாந்து அரசாங்கத்திடம் நாங்கள் ஆலோசனை நடத்தி வருகிறோம்' என்று ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

## கொரோனா பரவல் தீவிரமடைவதால் இந்திய ஓபின் பட்மின்டன் தொடர் பிற்போடப்பட்டது

இந்திய ஓபின் சர்வதேச பட்மின்டன் போட்டித் தொடர் டெல்லியில் மே 11 ஆம் திகதி முதல் 16 வரை ரசிகர்கள் இன்றி நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

டோக்கியோ ஒலிம்பிக்குரிய தகுதிச் சுற்றாகவும் இந்தப் போட்டித் தொடர் அமைந்திருந்ததால் இத்தொடரில் பங்கேற்பதற்காக ஒலிம்பிக் மற்றும் உலகச்சம்பியன்கள் உட்பட உலகம் முழுவதுமிருந்தும் 228 வீர வீராங்கனைகள் தங்களது பெயர்களைப் பதிவு செய்திருந்தனர்.

இந்த நிலையில், டெல்லியில் கொரோனா பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதோடு ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டிருப்பதால் போட்டித் தொடரை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. இதையடுத்து பட்மின்டன் சங்க நிர்வாகிகள், டெல்லி அரசு அதிகாரிகளுடன் பலகட்டமாகப் பேச்சுவார்த்தை நடத்தியதன் பின்னர் தற்போதைய சூழலில் இந்த போட்டித் தொடரைப் பின்னர் ஒரு திகதியில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தகவலை இந்திய பட்மின்டன் சங்கப் பொதுச்செயலாளர் அஜய் சிங்ஹானியா தெரிவித்துள்ளார்.



## ஐ.பி.எல் 2021 தொடரில் நேற்று மும்பை அணியை வீழ்த்தியது டெல்லி!

ஐ.பி.எல். 2021 தொடரின் நேற்று நடைபெற்ற 13ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியை டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 6 விக்கட்டுக்களால் வென்றது.

சென்னையில் நடைபெற்ற இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ரோஹித் ஷர்மா 44, இஷான் கிஷான் 26, சூர்யகுமார்யாதவ் 24 ஓட்டங்களை எடுத்தனர். டெல்லி அணியின் அமித் மிஸ்ரா, தான் வீசிய 4 ஓவர்களில் 24 ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், அவேஸ் கான் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 138 என்ற வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய டெல்லி கப்பிட்டல்ஸ் அணி 19.1 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுக்களினால் வெற்றியைத் தனதாக்கியது. சிகர் தவான் 45, ஸ்டீவ் ஸ்மித் 33, லலித் யாதவ் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களைப் பெற்றனர்.

மும்பை அணி தனது பந்து வீச்சினால், டெல்லி அணியை ஓட்டங்கள் எடுக்கவிடாது இறுதி ஓவர்களில் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தபோது களத்துக்கு வந்த ஹெட்மயர் அடித்த இரண்டு பவுண்டரிகள் அடங்கலான 14 ஓட்டங்கள் டெல்லி அணியை சிக்கலின்றி வெற்றிக்கு அழைத்துச் சென்றிருந்தது.

நேற்றைய போட்டியின் நாயகனாக பந்து வீச்சில் அசத்திய டெல்லி அணியின் அமித் மிஸ்ரா தெரிவானார். இந்தப் போட்டியின் தோல்வியோடு அணிகளுக்கான புள்ளி வரிசைப் பட்டியலில் மும்பை இந்தியன்ஸ் நான்காமிடத்துக்கு இறங்கியது. விளையாடிய மூன்று போட்டிகளிலும் வென்றுள்ள ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 6 புள்ளிகளோடு முதலிடத்திலும், 4 போட்டிகளில் மூன்றில் வென்றுள்ள டெல்லி கப்பிட்டல்ஸ் அணி இரண்டாமிடத்திலும் உள்ளன. இப்போது மூன்றாமிடத்திலுள்ள சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, இன்றைய போட்டியில் பெரிய வெற்றியைப் பெற்றால் முதலிடத்துக்கு முன்னேறும் வாய்ப்பைக் கொண்டுள்ளது.

## ரோஹித் ஷர்மாவுக்கு அபராதம்!

ஐ.பி.எல். 2021தொடரின் நேற்றைய போட்டியில் மும்பை இந்தியன்ஸ், டெல்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதியிருந்தன. இந்தப் போட்டியில் டெல்லி அணி வெற்றிபெற்றது. டெல்லி அணி துடுப்பெடுத்தாடியபோது மும்பை அணி, பந்து வீசுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை விட மேலதிகமாக எடுத்துக் கொண்டது என போட்டி மத்தியஸ்தர் அறிக்கையிட்டிருந்தார்.

அதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட ஐ.பி.எல். நிர்வாகம், அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், ரோஹித் ஷர்மாவுக்கு 12 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

ஐ.பி.எல். 14ஆவது சீசனின் 13ஆவது லீக் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு எதிராக மும்பை இந்தியன்ஸ் அணி பந்துவீச அதிக நேரம் எடுத்துக்கொண்டது. இது அந்த அணியின் முதல் குற்றம் என்பதால், கப்டன் ரோஹித் ஷர்மாவுக்கு 12 லட்சம் அபராதம் மட்டும் விதிக்கப்படுகிறது. மீண்டும் தவறு செய்யும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். இன் புதிய விதிகளின்படி 20 ஓவர்கள் கொண்ட ஓர் இன்னிங்ஸை 90 நிமிடங்களில் முடிக்கவேண்டும். ஒரு மணி நேரத்திற்குள் 14.1 ஓவர்கள் வீசி முடித்திருக்க வேண்டும். 90 ஆவது நிமிடத்தில் குறைந்த பட்சம் 20 ஆவது ஓவரை வீசத் தொடங்கியிருக்க வேண்டும். இல்லை என்றால் அது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும். இந்த விதிமுறையை முதல்முறை மீறும்போது அபராதம் மட்டும் விதிக்கப்படும். மீண்டும் தவறு செய்தால் இரண்டு போட்டிகள் வரை தடைவிதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.




## மக்ஸ்வெல்லுக்கு பொருத்தமான அணி ரோயல் சலஞ்சர்ஸ்தான் - மைக்கேல் வோகன் கருத்து

"மக்ஸ்வெல்லுக்கு ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிதான் பொருத்தமான அணி. அதனால் தான் அவர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்" என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டன் மைக்கேல் வோகன் தெரிவித்துள்ளார்.

அதற்குக் காரணம் பெங்களூர் அணியில் விராட் கோலி, டிவில்லியர்ஸ் இருவரும் உள்ளனர். அதனால் மக்ஸ்வெல் மீது அதிக அழுத்தமும் எதிர்பார்ப்பும் இல்லை. அதை அவர் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு திறம்பட விளையாடி வருகிறார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னதாக ஐ.பி.எல். தொடர்களில் பஞ்சாப் கிங்ஸ், டெல்லி கப்பிட்டல்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகளில் விளையாடியுள்ள மக்ஸ்வெல் தற்போதைய ஐ.பி.எல். சீசனில் மூன்று போட்டிகளில் 176 ஓட்டங்களைக் குவித்துள்ளார். அவரது ஆட்டம் பெங்களூர் அணியின் வெற்றிக்கு பெரிதும் கை கொடுத்து வருகிறது.



## ஐ.பி.எல்.கிரிக்கெட் 2021 தொடரில் இன்று இரண்டு போட்டிகள் நடைபெறுகின்றன.

இலங்கை நேரப்படி இன்று மாலை 3.30இற்கு ஆரம்பமான முதல் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ், சன்ரைசஸ் ஹைதராபாத் அணிகளும், 7.30இற்கு தொடங்கவுள்ள இரண்டாவது போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகளும் மோதுகின்றன.

முதல் போட்டி சென்னையிலும் இரண்டாவது மும்பையிலும் இடம்பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு சாட்சியங்களை நல்லாட்சி அரசு அழித்துள்ளது

## இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸா இப்படிக் குற்றச்சாட்டு



ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் சஹ்ரானின் மடிக்கணினி காணாமல் போயுள்ளது. நல்லாட்சி அரசாங்கம் தனது இறுதி ஆறுமாத காலத்தில் தாக்குதலுடன் தொடர்புபட்ட சாட்சியங்கள் அனைத்தையும் அழித்துள்ளது என இராஜாங்க அமைச்சர் நிமல் லான்ஸா சபையில் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் நடத்திய பிரதான சூத்திரதாரி ஒருவர் இருப்பார் என்றால் அவரை நிச்சயமாக கண்டறிய நடவடிக்கை எடுப்போம். அதேபோல் மத்திய வங்கி ஊழல் வாதிகளுக்கும் விரைவில் தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை, வெளிநாட்டுச் செலாவணி சட்டத்தின் கீழான 5 ஒழுங்கு விதிகளும், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான இரண்டு அறிவித்தல்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஈஸ்டர் தாக்குதலுக்கு ஹரின் பெர்னாண்டோ பிரதான மாகப் பொறுப்புக்கூறியாக வேண்டும், ஏனென்றால் இவ்வாறான தாக்குதல் நடத்தப்படப்போவதாகத் தெரிந்து கொண்ட ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவேயாவார்.

ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்படுவதற்கு இடமளித்து, மக்கள் கொல்லப்படுவதற்கு இடமளித்து, பலர் காயமடைய இடமளித்தவர்கள் இன்று தாக்குதல் பிரதான சூத்திரதாரியைக் கைதுசெய்யவில்லையா எனக் கேட்கின்றனர்.

மத்திய வங்கியைக் கொள்ளையடிக்க அனுமதித்து, குற்றவாளியை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டு மத்திய வங்கி ஊழலில் பிரதான குற்றவாளியைக் கைது செய்யவில்லையா என எம்மிடம் கேட்கின்றனர்.

ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்றவுடன் அன்றில் இருந்து நாம் ஆட்சிக்கு வரும் வரையில் ஆட்சியில் இருந்தவர்கள் ஏன் அன்றே பிரதான சூத்திரதாரியைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவில்லை.

இன்று சபையில் கூறும் காரணிகளை ஏன் அன்றே கண்டறியவில்லை. ஐ.பி. முகவரியில் கண்டறிய முடியும் என இன்று கூறும் நீங்கள் ஏன் அன்றே இதனை செய்யவில்லை. கத்தோலிக்க மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற வேண்டாம்.

கத்தோலிக்கர்கள் இறந்த நேரத்தில் கறுப்புச் சால்வை அணியாத ஹரின் பெர்னாண்டோ இன்று ரஞ்சன் ராமநாயக்கவிற்காக கறுப்பு சால்வை அணிகின்றார்.

இது உண்மையான கத்தோலிக்கர் செய்யும் செயல் அல்ல. ரஞ்சன் ராமநாயக்கவை வைத்து அரசியல் செய்யவே இவர்கள் முயற்சிக்கின்றனர். உண்மையாகவே ரஞ்சன் ராமநாயக்க மீது கரிசனை இருந்திருந்தால் அவர் நாடாளுமன்ற உறுப்புரிமை பறிபோய் சில மணிநேரங்களில் இன்னொருவரை நியமித்திருக்க மாட்டீர்கள். ஆகவே உங்களின் கீழ்த்தரமான செயலை நான் ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்.

இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு பாரிய அச்சுறுத்தலில் இருந்தது, எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் மிகக் குறுகிய காலத்தில் தேசியப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் எந்தவோர் அடிப்படைவாத, பயங்கரவாத அமைப்பிற்கும் இலங்கை மீது தாக்குதல் நடத்த முடியாது. மக்கள் எந்தவித அச்சமும் இல்லாது நடமாட முடிகின்றது.

அதேபோல் ஈஸ்டர் தாக்குதல் நடத்திய பிரதான சூத்திரதாரி ஒருவர் இருப்பார் என்றால் அவரை நிச்சயமாக கண்டறிய நடவடிக்கை எடுப்போம். ஆனால் சஹ்ரானின் மடிக்கணினி காணாமல் போயுள்ளது.

நல்லாட்சியின் இறுதி ஆறுமாத காலத்தில் சாட்சியங்கள் அனைத்தையும் அழித்துள்ளனர். எனவே மிகவும் கடினமாக நாம் இந்த விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாகப் பேசுவதற்கு ஹரின் பெர்னாண்டோவிற்கு எந்தத் தகுதியும் இல்லை, வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றால் பிணத்தையும் விற்கும் நபரே ஹரின்.

பதுளை மக்களை ஏமாற்றி வாக்குக் கேட்டு இறுதியாக மக்களையும் தனது குடும்பத்தையும் கைவிட்டு கொழும்பு வந்ததைப் போலவே இப்போது கம்பஹா மாவட்டத்தில் மக்களை ஏமாற்றும் வேலையை ஆரம்பித்துள்ளார். ரஞ்சன் ராமநாயக்கவின் வாக்குகளை கைப்பற்றும் முயற்சியே இவை அனைத்தும் எனவும் அவர் கூறினார்.

## ஈஸ்டர் குண்டு தாக்குதல் ஈராண்டு நினைவு இன்று



**இரண்டு வருடங்கள் கடந்தன இன்றே**
**ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் இலங்கையிலே**
**இஸ்லாத்தின் பெயரால் எமது மண்ணிலே**
**எட்டு இடத்தில் வெடித்த பேரவலம்**
**புனித கத்தோலிக்க கிறிஸ்தவஆலயங்கள்**
**நட்சத்திர கொழும்பு விடுதிகள் எல்லாம்**
**நஞ்சுக்குண்டைக் காவிய நயவஞ்சகர்கள்**
**பிஞ்சுக் குழந்தைகள் பெரியவர்கள் பெண்கள்**
**வெள்ளைக்கார வெளிநாட்டு பிரஜைகளுக்கு**
**கொள்ளிவைத்த கொலை வெறி நாளிது**

**மட்டக்களப்பில் சென் ஜோண் தேவாலயமும்**
**மரணக்குண்டால் மடிந்த உயிர்கள் ஏராளம்**
**இரத்த வெள்ளம் உரத்த பெரும் கூக்குரல்**
**உடல்கள் சிதறி உறவுகளை நாம் இழந்தோம்**
**உலகப்பயங்கர வாத இஸ்லாமிய அமைப்பு**
**கலகப் பேர்வழிகளின் கண்மூடித்தன செய்கை**
**காத்தான்குடி, கல்முனைக்குடி, சம்மாந்துறை**
**கொழும்பு, குருநாகல், இலங்கையில் எல்லாம்**
**இஸ்லாம் மத இளைஞர் யுவதி வர்த்தகர்கள்என**
**ஏராளம் பேரை கைதுசெய்ய வைத்த நாளிது**

**இன்னும் விசாரணை இப்பவும் தொடர்கிறது**
**ஆணைக்குழு அறிக்கை கிடப்பில் கிடக்கிறது**
**ஆயினும் அரசுகள் நீதியை தரவில்லை**
**ஆயர்கள் கண்டனம் அடிக்கடி உரைகள்**
**பேயர்களாக மாண்ட உறவினர்கள் உறவுகள்**
**பெருமூச்சு விட்டு பேதலித்து வாழ்கிறார்கள்**
**இரண்டு வருடங்கள் இப்படித்தான் கழிந்தது**
**இன்றைய நாளிலும் இறந்தவர்களுக்காக**
**இறைவனை வேண்டி அஞ்சலி செய்வோம்!**
**எங்களின் நாட்டினில் அநீதிக்கு நீதியில்லை!**

**- அம்பிளாந்துறையூர் அரியம் -**

# கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்தது

## அனுர பிரியதர்ன யாப்பா கருத்து



நாட்டின் பொருளாதார நிலைமையை வேறொரு திசைக்கு மாற்றும் முதல் அடித்தளமாகவே கொழும்பு துறைமுக திட்டம் அமைந்துள்ளதெனவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது மிக முக்கிய திட்டமெனவும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை, வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழான 5 ஒழுங்கு விதிகளும், மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான இரண்டு அறிவித்தல்கள்மீதானவிவாதத்தில்உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

கட்சிகள் இடையில் கொள்கைகளில் வேறுபாடுகள் இருந்தாலும் கூட நாட்டின் பொருளாதார கொள்கையில் நிலையான ஒரே கொள்கை கையாளப்பட வேண்டும்.

சீனா கெம்யூனிஸ்ட் நாடாக இருந்தாலும் அவர்களின் பொருளாதாரக் கொள்கை முதலாளித்துவ கொள்கையின் அடிப்படையில் கையாளப்பட்டு வருகின்றது.

சுதந்திர வர்த்தக முறைமையைக் கொண்டு அவர்கள் வெற்றிகண்டு வருகின்றனர். எனவே, இலங்கையில் எந்த ஆட்சியாளர் எந்த கொள்கையில் இருந்தாலும் நிலையான பொருளாதாரக் கொள்கை கையாளப்பட வேண்டும்.

கொழும்புத் துறைமுக நகர் தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன, ஆனால், நாட்டின் பொருளாதார நிலைமையை வேறொரு திசைக்கு மாற்றும் முதல் அடித்தளமாகவே இந்தத் திட்டம் அமைந்துள்ளது.

இதனை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்பது தொடர்பாகத் தற்போது சட்டமூலம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. சர்வதேச முதலீடுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், தொழில் பேட்டைகளை உருவாக்கவும் பொழுதுபோக்குத் துறைகளை உருவாக்கவும் வேண்டும் என்றால் அதற்கான மிகச்சிறந்த திட்டமே துறைமுக நகர் மூலமாக உருவாக்கப்பட்டு வருகின்றது.

முன்னைய ஆட்சியிலும், இந்த ஆட்சியிலும் துறைமுக நகர் தொடர்பாக வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். ஆனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது மிக முக்கிய திட்டமாகும்.

சுதந்திர வர்த்தகக் கொள்கையே இன்றும் இலங்கையைப் பாதுகாத்து வருகின்றது, புதிய பொருளாதாரக் கொள்கைக்கு அமையவே நாம் செயற்பட்டாக வேண்டும். அதிலேயே எமது அபிவிருத்தி தங்கியுள்ளது. – என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் குமார் வெல்கம கூறுகையில் –

துறைமுக திட்டத்தை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், அதற்காக உருவாக்கப்படும் சட்டத்தில் தான் பிரச்சினை உள்ளது, அதுமட்டுமல்ல கடலை நிரப்பி நகரை நிர்மாணிப்பதால் இப்போது இல்லாவிட்டாலும் கூட இன்னும் நூறு ஆண்டுகளில் பாரிய விளைவுகளைச் சந்திக்க வாய்ப்புகள் உள்ளது.

அதனையும் கருத்தில் கொள்ள வேண்டும். – என்றார். இதற்குப் பதில் தெரிவித்த அனுர பிரியதர்ஷன யாப்பா எம்.பி. கூறுகையில் –

ஆணைக்குழு அதிகாரங்களைக் கண்டு அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. அதுமட்டுமல்ல எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது தொடர்பாக இப்போது எதனையும் கூற

## சீரடி சாயி இராஜகோபுரத்துக்கு நாளை காலை அத்திபார நடுகை

*ஸ்ரீ சத்ய சாயி பாபா, மகான் சீரடி சாயி பாபா அவதாரங்களின் ஆலயத்தின், 56 ஆவது ஆண்டை முன்னிட்டு, கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சாயி நிலையத்தின், சீரடி மந்திருக்கு, சீரடி சாயி இராஜகோபுரம் கட்டப்படவுள்ளது. இதற்கான அத்திபாரக்கல் பிரதிட்டை நாளை 22 ஆம் திகதி, வியாழக்கிழமை, காலை 8 மணியளவில், சீரடி சிவச்சாரியார்கள் சகிதம் நடை பெறவுள்ளது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# போரினால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த அனுமதியுங்கள்!

## ஜெபரட்ணம் அடிகளார் அரசிடம் உருக்கம்



கொழும்பு, ஏப். 21

ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்த அரசாங்கம் பாதுகாப்பளித்து அனுமதி அளிப்பதை போல யுத்தத்தின் போது உயிரிழந்தோரையும் நினைவு கூருவதற்கு இந்த அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் அது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர் -

நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக நடைபெற்ற போரின் போது வடபகுதியில் எத்தனை ஆலயங்கள் மீது குண்டு வீசப்பட்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் எத்தனையோ மக்கள் இறந்தார்கள். தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். அந்த வேளையிலே தென்பகுதியில் இருந்து யாரும் எங்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை. எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு நிச்சயமாக இருக்கின்றது.

அது உண்மைதான். இப்படியான ஒரு நிலையில் தென் பகுதியில் நடைபெற்ற ஒரு நிகழ்வுக்கு நாங்கள் ஏன் நினைவு நிகழ்வுகளைச் செய்ய வேண்டும்? என்று ஒரு கேள்வி பலரிடையே நிச்சயமாக இருக்கின்றது.

ஆனால் சரியான ஒரு காரியத்தை ஒருவர் செய்யவில்லை என்பதற்காக, சரியான ஒரு காரியத்தை நாங்கள் செய்யாது இருக்கக்கூடாது. ஆண்டவர் இயேசு சொல்லுவார் பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அவற்றை எல்லாம் நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள். அதற்கு ஆதரவாக இருக்க வேண்டும் எனக் கூறப் படுகின்றது.

அதேபோல், அவர்களுடைய துன்ப வேளைகளில் எங்களுடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் கொடுக்க வேண் டியது எங்களுடைய கிறிஸ்தவ மக்களுடைய கடமையாகும். ஆகவே, இன்றைய தினத்தில் இந்த அஞ்சலி நிகழ்வுகளை நாங்கள் செய்து எங்களுடைய ஆதரவையும் அஞ்சலிகளையும் செலுத்துவதற்கு முன்வருவோம்.

இந்த வேளையிலே அரசாங்கத் திடம் நாங்கள் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றோம். இந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தோரை நினைவு கூருவதற்கு, அனுமதி வழங்கி அதற்கான பாதுகாப்புகளை நீங்கள் கொடுக்கிறீர்கள். அதற்காக நாங்கள் நன்றி சொல்கின்றோம்.

இதேபோல தமிழ் மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் 30 ஆண்டுகளாக அனுபவித்த போரின் போது, இறந்து போன ஆயிரக்கணக்கான மக்கள், இறந்து போன இளைஞர், யுவதிகளையும் நினைவு கூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்த எங்களுக்கு அனுமதி தரவேண்டும். பாதுகாப்புத் தர வேண்டும்.

அது நாங்கள் செய்ய வேண்டிய ஓர் உணர்வுபூர்வமான நிகழ்வாக இருக்கிறது என்பதையும் இந்த வேளையிலே தெரிவித்து, இதனை இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் அதிக கரிசனை எடுத்து அனுமதிகளை விரைவில் வழங்க வேண்டும் என வினயமாக கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, அனைத்து மக்களுடன் இணைந்து குறிப்பாக யாழ். மறை மாவட்ட ஆயர், குருக்கள், துறவிகள் அனைவரும் இணைந்து தாக்குதலில் இறந்து போனவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலியை செலுத்துவதற்கும் அதேபோல் பாதிக்கப்பட்டிருப்போருக்கும் ஆறுதல் கூறுவோம், எதிர்காலத்திலும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாது மக்கள் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ இந்த நாட்டிலே சமாதானம் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். - எனவும் தெரிவி தார்.

# வீதி விளக்குகளைப் பொருத்தவதற்கு உள்ளூராட்சி உதவி ஆணையர் தடை

## கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் குற்றச்சாட்டு

கரைச்சியில் வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தடை விதித்துள்ளார் என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கரைச்சி பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டு பாதீட்டில் சுமார் 80 லட்சம் ரூபா 21 வட்டாரங்களுக்கு மின்குமிழ் பொருத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



குறித்த நிதி மேற்படி தேவையை நிறைவு செய்வதற்காக வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டது. குறித்த நிதியை விடுவித்து இருபத்தொரு வட்டாரங்களிலும் தலா 45 வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கு 2020 ஆம் ஆண்டு பாதீடு அங்கீகாரத்தை வழங்கியிருந்தது.

இந்த வேலைத்திட்டதை நிறைவேற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரபாகரன் தடைவிதித்துள்ளார் என்றும் ஆளுநருக்கு முகவரியிட்டு சபையால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பத்தை அனுமதி மறுத்து திருப்பி அனுப்பி இருக்கின்றமை மோசமான நடவடிக்கை என்றும் சபையால் நிறைவேற்றப்பட்ட பாதீட்டு செயற்றிட்டங்களைத் தனது சுய விருப்பின் அடிப்படையில் தடுத்திருக்கின்றமை உள்ளூராட்சி சபைகளின் சுயாதீனத்திற்கும் மக்கள் ஆணைக்கும் எதிரானது என்பதுடன் ஆளுநருக்கு முன்னளிக்க வேண்டிய கடிதத்தை ஒரு கீழ் நிலை அதிகாரி திருப்பி அனுப்பி இருக்கின்றமை வரம்பு மீறிய செயலாகும். இது தொடர்பில் ஆளுநரின் கவனத்துக்கும் சபைத் தீர்மானம் அனுப்பி வைக்கப்படும் என்றும் 2021 ஆம் ஆண்டு தை மாதம் 25 ஆம் நாள் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்துக்கு மூன்று மாதங்கள் கழித்து கடந்த திங்கட்கிழமை மீளத் திருப்பி அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் அறிக்கையில் பல குறைபாடுகள் மீள்விசாரணைக்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்குக

## கத்தோலிக்க மக்கள் அமைப்புக்களின் கூட்டணி கோரிக்கை

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் பல குறைகள் காணப்படுகின்றன.

சில விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவில்லை. ஆகவே, மீண்டும் விசாரணையை நடத்துவதுற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அதிகாரத்தை வழங்குமாறு கத்தோலிக்க மக்கள் அமைப்புக்களின் கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கை முழுமையானதும் பூரணமானதுமான அறிக்கையாக நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என கத்தோலிக்க மக்கள் அமைப்புக்களின் கூட்டணியின் ஏற்பாட்டாளர் திலின அலஹகோன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சீ.எஸ்.ஆர். நிலையத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் பல குறைகள் காணப்படுகின்றன. சில விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவில்லை. இந்தத்தாக்குதலில்தொடர்புடைய சிலரை தப்பிக்க விட்டுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு பின்புலமாக அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், மதத் தலைவர்கள், மத அடிப்படைவாதிகள் என பல்வேறு தரப்பினர் சம்பந்தப்பட்டுள்ளனர்.

அவ்வாறானவர்களை சட்டத்திலிருந்து தப்பிக்கவிடாது உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நியாயமான தீர்ப்பொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டும். - என்றார்.

தாக்குதலுடன் தொடர்புடையவர்களை இரண்டே மாதங்களில் கண்டுபிடித்து தண்டனை வழங்குவதாக கூறி ஆட்சிப் பீடமேறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, 2 வருடங்களான நிலையிலும் தொடர்புடையவர்களை கண்டுபிடித்து, சட்டத்தின் முன்னிறுத்த முடியாமல் போயுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

'உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கு தொடர்புப்பட்டவர்களை 2 மாதங்களில் கண்டுபிடித்து சட்டத்தின் முன்னிறுத்தி, நியாயம் வழங்குவேன் என கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். எனினும், தற்போது 2 வருடங்கள் ஆகியுள்ளபோதிலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

எதுவும் நடந்தபாடில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கவில்லை. இந்த கொடூரத் தாக்குதலுக்கு பின்புலமாக இயங்கிய அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், மதத் தலைவர்கள், மத அடிப்படைவாதிகள் என ஒவ்வொருவரையும் சட்டத்தின்படி தண்டிக்க முடியாமல் போயுள்ளது. - என்றார்.

# இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு போர்ட் சிட்டியில் முதலீடு செய்ய அரசாங்கம் அழைப்பு

போர்ட் சிட்டியில் முதலீடு செய்ய இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

கட்டார் மற்றும் ஓமானில் இருந்து கொழும்பு துறைமுக நகர பொருளாதார மண்டலத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது எனவும் எதிர்காலத்தில் இந்தியாவுடன் இணைந்து அதனை முன்னெடுக்குமெனவும் நிதி மற்றும் மூலதனச்சந்தை, அரச தொழில் முயற்சி சீர்திருத்த இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

மேலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சிறப்பு தூதுவராக ஓமான் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டபோது அந்நாட்டு அதிகாரிகளுடன் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடினார் எனவும் அவர் இலங்கையிலுள்ள ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

முதலீடுகளின் சாத்தியமான பகுதிகளை அடையாளம் காண்பதற்காக இரு நாட்டு பிரதிநிதிகளும் இலங்கைக்கு வருகை தருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் துறைமுக நகரம் தொடர்பான தற்போதைய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்ட பின்னர் இது நடக்குமென அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org